6.	(வலை/ மென்.பொ / பல்லூடகம் மற்றும் வ.தளம்) தொழில்நுட்ப இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத்தில் தொழில்நுட்ப இளமாணி	2017	வார நாள்	நான்காம் அரையாண்டு	19.08.2019	30.08.2019

7.5 பொதுப் பட்டமளிப்பு விழா – 2019

பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா 2019 நவம்பர் 21 அன்று BMICH இல் நடைபெற்றது. இதில் கல்வித் தொழில்நுட்பம், ஆங்கில மொழி கற்பித்தல், தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம், பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம், வலையமைப்புத் தொழில்நுட்பம், மென்பொருட் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் கல்வி இளமாணி, பயிற்சித் தொழில்நுட்பப் பீடத்தின் 165 மாணவர்கள பட்டம் பெற்றனர். இதுபற்றிய விவரங்கள் அட்டவணை கீழே வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7.5: பொதுப் பட்டமளிப்பு விழா 2019

பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் தலைப்பு	பட்டம் பெறுவோர் எண்ணிக்கை
தொழில்நுட்பத்தில் கல்வி இளமாணி	03
ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி	22

தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	12
பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	40
வலையமைப்புத் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	42
மென்பொருட் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி	46
அணி மொத்தம்	**165**

7.6 கல்விசார் பணியாளர் விவரம்

கீழே காட்டப்பட்டுள்ள பீடத்தின் நிரந்தர கல்விசார் ஊழியர்கள், விரிவுரைகளை வழங்குவதில் செய்முறை வகுப்புகளை நடத்துதல், ஒப்படைகள், எழுத்துமூல வினாத்தாள் போன்றவற்றை தயாரித்தல் மதிப்பீடு செய்தல் முதலான செயற்பாடுகளிலும் பிற கல்வி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

அட்டவணை 7.6: பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துத்துவதில் ஈடுபட்டுள்ள கல்விசார் ஊழியர்கள் - 2019

சூ	பெயரும் பதவியும்	கற்கைநெறி	அலகு / பாடம்
01	திரு. எல்.டபிள்யு.எஸ். குலரத்ன, பீடாதிபதி, முதுநிலை விரிவுரையாளர் தரம் II	ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி	1. கவிதை 2. மொழி கற்றல் மதிப்பாய்வு
02	திரு. எஸ்.ஏ. லியனகே முதுநிலை விரிவுரையாளர் தரம் II, துறைத் தலைவர்/ITTD	தொழில்நுட்ப இளமாணி (MAN/MEC/ELT)	1. ஆ.மொ.கற்பித்தல் அணுகுமுறைகளும் முறையியலும் 2. கணினி உதவியுடன் மொழி கற்றல் 3. இறுதியாண்டுச் செயற்றிட்டங்கள்
03	திருவாட்டி வை.ஜி. பத்ம ஷாந்தி, முதுநிலை விரிவுரையாளர் தரம் II	தொழில்நுட்பத்தில் கல்வி இளமாணி ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி	1. கல்வி உளவியல் 2. உள்ளுறைப் பயிற்சி 3. தொழில் வழிகாட்டலும் ஆலோசனையும் 4. கற்றல் முறைகள் கற்பித்தல் I
04	பொறி.(திருமதி) ரி.கே. மல்வத்த, முதுநிலை விரிவுரையாளர் தரம் II	தொழில்நுட்ப இளமாணி (SOF/NET/MMW)	1. வலைத்தள நிரலாக்கம் 2. கணினி நிரலாக்கம் 3. இறுதியாண்டுச் செயற்றிட்டங்கள்
05	கலா. ஏ.எம். ஜஸீல், முதுநிலை விரிவுரையாளர் தரம் II	தொழில்நுட்பத்தில் கல்வி இளமாணி ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி	1. கற்றல் மதிப்பீடு 2. உள்ளுறைக் கற்பித்தற் பயிற்சி
06	திருமதி வை.எஸ். மானதுங்க, முதுநிலை விரிவுரையாளர் தரம் II கல்வி மற்றும் பயிற்சித் துறைத் தலைவர்	தொழில்நுட்பத்தில் கல்வி இளமாணி ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி	1. கல்விசார் உளவியல் 2. கருப்பொருள் விவரணக் கட்டுரை 3. போதனா மொழி 4. தொழில்வாண்மை விருத்தி 5. தொழில்வாண்மையினருக்கான உளவியல் 6. செயற்றிட்டங்கள்
07	திருவாட்டி எல்.எச்.டி.எல். ரணசூரிய, முதுநிலை விரிவுரையாளர் தரம் II மொழிக் கற்கைகள் துறைத் தலைவர்	தொழில்நுட்ப இளமாணி (CTRM) ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி	1. கவிதை 2. இலக்கியத்திற்கோர் அறிமுகம் 3. உயர்தரத் தொடர்பாடற் திறன்கள் 4. செயற்றிட்டங்கள்
08	திருவாட்டி யு. சிவச்செல்வி, முதுநிலை விரிவுரையாளர் தரம் II முகாமைத்துவக் கற்கைகள் துறைத் தலைவர்	தொழில்நுட்ப இளமாணி (IM)	1. கணக்கீட்டுக்கோர் அறிமுகம் 2. செலவுக்கணிப்பு, செலவுப் பயன் பகுப்பாய்வு 3. செயற்றிட்டங்கள்
09	திருவாட்டி என். எல்.பி. ஒஷாதி, முதுநிலை விரிவுரையாளர் தரம் II	தொழில்நுட்ப இளமாணி (IM)	1. செயற்றிட்ட முகாமைத்துவம் 2. தொழில்நுட்ப முகாமைத்துவம் 3. மூலோபாய முகாமைத்துவம்

10	திரு. எச். ஏ. செனவிரத்ன, முதுநிலை விரிவுரையாளர் தரம் II, MMW துறைத் தலைவர்	தொழில்நுட்ப இளமாணி (ICT) தொழில்நுட்ப இளமாணி (IM) தொழில்நுட்ப இளமாணி (FPT)	1. த.தொ.தொ.நுட்பத்திற்கான அறிமுகம் 2. உணவுத் தொழில்நுட்பத்துக்கான த.தொ.தொழில்நுட்பம் 3. தொழில்முயற்சி மேம்பாடும் முகாமைத்துவமும்
11	திருமதி. கே. யு. எம். டி சில்வா, முதுநிலை விரிவுரையாளர் தரம் II	தொழில்நுட்ப இளமாணி (ICT)	1. வலையமைப்பு முறைமைகள் 2. டிஜிற்றல் இலத்திரனியல்
12	பொறி. ஏச்.பி.ஏ.ஐ. பத்திரண, முதுநிலை விரிவுரையாளர் தரம் II, SOF துறைத் தலைவர்	தொழில்நுட்ப இளமாணி (NET)	1. வலையமைப்புகளுக்கிடையிலான வழிச்செலத்தல் 2. வலையமைப்புகளுக்கிடையிலான மடைமாற்றம்
13	திருமதி. பி.எம்.ரி.டி. ஜயசேகர விரிவுரையாளர்(தகுதிகாண்நிலை)	தொழில்நுட்ப இளமாணி (IM)	1. ஆய்வு முறையியல் 2. வியாபார உத்திகள் I & II
14	திருவாட்டி ஜே.ஏ.எம்.பி. கருணாரத்ன, விரிவுரையாளர்(தகுதிகாண்நிலை)	கல்வி இளமாணி (ELT) தொழில்நுட்ப இளமாணி (ICT) தொழில்நுட்ப இளமாணி (MAPT)	1. ஆங்கிலத்தில் தொடர்பாடற் திறன்கள் I & II 2. வாசிக்கப் பயிற்றுதல் 3. கற்பித்தற் பயிற்சி 4. பிரயோக மொழியியல் 5. செயற்றிட்டங்கள்
15	திருவாட்டி ஏ.ஏ. குணவர்தன, விரிவுரையாளர்(தகுதிகாண்நிலை)	கல்வி இளமாணி.(ELT)	1. ஆங்கில மதிப்பாய்வு 2. ஆங்கிலத்தின் கட்டமைப்பு 3. தொடர்பாடற் திறன்கள் 4. உள்ளுறைப் பயிற்சி
16	திருவாட்டி எம்.சி.என். பெரேரா விரிவுரையாளர்(தகுதிகாண்நிலை)	தொழில்நுட்ப இளமாணி (ICT) கல்வி இளமாணி (ELT)	1. கவிதை 2. இலக்கிய அறிமுகம் 3. உள்ளுறைப் பயிற்சி 4. ஆங்கிலத்தில் தொடர்பாடற் திறன்கள் I
17	திரு. ஆர்.எம்.சி. அசோக பந்துல கற்பித்தல் உதவியாளர் NET துறைத் தலைவர்	தொழில்நுட்ப இளமாணி (ICT)	1. கணினிக் கட்டமைப்பும் தொழிற்பாட்டு அமைப்புகளும் 2. டிஜிற்றல் இலத்திரனியல் 3. வலையமைப்புக்கிடையிலான வழிச்செலுத்தல் 4. வியாபார முயற்சித் தொழில்நுட்பமும் கட்டமைப்பும் 5. இறுதியாண்டுச் செயற்றிட்டம்
18	திரு. உருத்திரன் கற்பித்தல் உதவியாளர்	தொழில்நுட்ப இளமாணி (ICT)	1. தரவுத்தள வடிவமைப்பு 2. தரவுத்தள அமைப்பும் நிரலாக்கமும் 3. காண்பியச் செய்நிரலாக்கம் I 4. இறுதியாண்டுச் செயற்றிட்டங்கள்
19	திருவாட்டி. எஸ்.ஜி. நம்புவசம் கற்பித்தல் உதவியாளர்	தொழில்நுட்ப இளமாணி (ICT)	1. இணையத்தளத் தொழில்நுட்பம் 2. தரவுக் கட்டமைப்பும் நெறிமுறைகளும் 3. பல்தளச் செய்நிரலாக்கம் 4. விடயதான முகாமைத்துவ முறைமை 5. இறுதியாண்டுச் செயற்றிட்டங்கள்
20	திரு. எஸ்.ஏ.என். தனுஷ்க கற்பித்தல் உதவியாளர்	தொழில்நுட்பத்தில் கல்வி இளமாணி ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி	1. கல்வியில் தத்துவார்த்த, சமூக அடித்தளம் 2. கற்றல் மதிப்பீடு 3. போதனா மொழிகள் 4. பாடவிதானத்தை மேம்படுத்தல், நடைமுறைப்படுத்தல், மதிப்பிடல் 5. கல்வியில் ஆய்வு முறையியல் 6. கல்வி முகாமைத்துவம்
21	திரு. பி.எச்.எஸ்.எஸ். விஜயரத்ன முதுநிலை பொறியில் கற்பித்தல் உதவியாளர் CEC துறைத் தலைவர்	தொழில்நுட்ப இளமாணி (ICT)	1. தரவுத் தொடர்பாலும் வலையமைப்புகளும்

7.7 2019இல் பீடத்தின் வருகைதரு விரிவுரையாளர்கள் பற்றிய சுருக்க அறிக்கை

அட்டவணை7.7: 2019இல் ஆண்டுக்கான பீடத்தின் வருகைதரு விரிவுரையாளர்கள் பற்றிய சுருக்க அறிக்கை

#	தொழில்நுட்ப இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்	பதிவுசெய்த ஆண்டு	நடத்தப்பட்ட முறை	அரையாண்டு	வருகைதரு விரிவுரையாளர்களின் எண்ணிக்கை
01	பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம் வலையமைப்புத் தொழில்நுட்பம் மென்பொருட் தொழில்நுட்பம் ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2016/2017	வார இறுதி	06	17
02	பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம் வலையமைப்புத் தொழில்நுட்பம் மென்பொருட் தொழில்நுட்பம் ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2017/2018	வார இறுதி	04 03	20 03
03	பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம் வலையமைப்புத் தொழில்நுட்பம் மென்பொருட் தொழில்நுட்பம் ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2017/2018	வார நாள்	04 03	29 03
04	பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம் வலையமைப்புத் தொழில்நுட்பம் மென்பொருட் தொழில்நுட்பம் ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2018/2019	வார இறுதி	03 02	29 07
05	பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம் வலையமைப்புத் தொழில்நுட்பம் மென்பொருட் தொழில்நுட்பம் ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2018/2019	வார நாள்	03 02	19 15
06	பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம் வலையமைப்புத் தொழில்நுட்பம் மென்பொருட் தொழில்நுட்பம் ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2019/2020	வார இறுதி	01	26
07	பல்லூடகம் மற்றும் வலைத்தளத் தொழில்நுட்பம் வலையமைப்புத் தொழில்நுட்பம் மென்பொருட் தொழில்நுட்பம் ஆங்கில மொழி கற்பித்தலில் கல்வி இளமாணி தொழிற்றுறை முகாமைத்துவத் தொழில்நுட்பம்	2019/2020	வார நாள்	01	27

7.8 தொழில்நுட்ப இளமாணி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புகள்

கல்விச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட விலக்களிப்புக் கொள்கையின் அடிப்படையில் மாணவர்களுக்கு விலக்களிக்கப்பட்டது. மாணவர்கள் NVQ 6 டிப்ளோமா அல்லது அதற்கு சமமான அல்லது உயர் தகுதி பெற்றிருந்தால் மட்டுமே விலக்குகளுக்கு தகுதியுடையவர்களாகக் கருதப்பட்டனர். மாணவர் டிப்ளோமா மட்டத்தில் சமமான பாடத்தை வெற்றிகரமாக முடித்திருந்தால் பாட அலகுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக மாணவர்கள் டிப்ளமோ கற்கைநெறியின் மூலப் பெறுபேற்று அறிக்கையை வழங்க வேண்டியிருந்தது.

விலக்குக் கோரும் மாணவர்கள் இரண்டு பிரிவுகளின் கீழ் விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. முதலாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகள், அரையாண்டிறுதிப் பரீட்சை உட்பட அனைத்து மதிப்பீடுகளிலும் இருந்து விலக்களிக்கப்பட்டது. எனினும் GPA ஐ கணக்கிடும் பொருட்டு குறிப்பிட்ட பாட அலகில் அவர்களது செயற்றிறன் சாதாரண தேர்ச்சிக்குச் சமமாக கருதப்பட்டது. இரண்டாம் வகுதி மாணவர்களுக்கு விரிவுரைகள், செய்முறை வகுப்புகளில் கலந்து கொள்வதில் இருந்து விலக்களிக்கப்பட்டபோதும் அவர்கள் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளை முடித்து, அரையாண்டிறுதிப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டியிருந்தது. இதன்படி, அம்மதிப்பீடுகளில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் அவர்களின் GPA இல் கணக்கிடப்பட்டன.

மேற்குறிப்பிட்ட இரண்டு வகுதிகளின்கீழும் விலக்களகிக்கப்பட்ட மாணவர்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை7.8: முதல் அரையாண்டில் விலக்குப் பெற்ற மாணவர்கள்

#	தொழில்நுட்ப இளமாணி (வார இறுதி) கற்கைநெறி - 2019	விலக்களிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை	
		வகுதி 01	வகுதி 02
1.	மென்பொருட் தொழில்நுட்பம்	01	01
2.	வலையமைப்புத் வுநஉாழெடழபல	01	--

7.9 தொழிற்றுறைப் பயிற்சி

தொழில் அடிப்படையிலான தொழிற்துறைப் பயிற்சி என்பது ஆறு மாதங்கள் நடைபெறும் இளங்கலைத் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு முக்கியமானதும் கட்டாயமானதுமான பகுதியாகும். இப்பாட அலகு ஐந்தாம் அரையாண்டில் வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு தேசிய பயிலுநர், தொழிற்துறைப் பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து இளங்கலைப் பயிற்சி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழிற்துறைகளில் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

7.10 தொழிற்றுறைத் தொடர்புக் குழுக்கள்

நிகழ்ச்சித்திட்டங்களைச் சிறந்தமுறையில் நடத்துவதற்கு உதவியும் ஆலோசனையும் வழங்கும் பொருட்டு ஒவ்வொரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்கும் தொழிற்துறைத் தொடர்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மேம்படுவதோடு சிறந்த பெறுபேறுகளையும் பெற முடியும். இக்குழுக்கள் கூடிப்பேசி வழங்கும் பின்னூட்டங்கள் நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும்.

7.11 நிகழ்ச்சித்திட்டங்களின் பாடத்திட்ட மீளாய்வு

பீடத்தால் வழங்கப்படும் அனைத்துப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் முதற் சுற்று பாடத்திட்ட மீளாய்வு 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிறைவடைந்தது. பீடத்தால் வழங்கப்படும் அனைத்துப் பட்டப்படிப்புகளின் பாடத்திட்டத் திருத்தங்களும் 2019 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

7.12 ஆய்வு

புதிதாக நியமிக்கப்பட்ட விரிவுரையாளர்கள் உட்பட அனைத்துக் கல்விசார் ஊழியர்களும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். 2018இல் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தவர்கள் தங்கள் ஆய்வுகளை முடித்துப் பல்கலைக்கழகத்திற்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய முன்மொழிவுகளையும் அவர்கள் சமர்ப்பித்துள்ளனர். சில ஊழியர்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச இதழ்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் விரிவுரையாளர்களில் பெரும்பாலானவர்கள் பீட மாணவர்களின் ஆய்வுகளை மேற்பார்வையிட்டுள்ளனர்.

ஆய்வுக் கருத்தரங்கு

பல்கலைக்கழகத்தின் நான்காவது ஆய்வுக் கருத்தரங்கு 2019 டிசம்பர் 13 அன்று பல்கலைக்கழகக் கலையரங்கில் நடைபெற்றது.

பீடத்தின் உறுப்பினர்களால் இக்கருத்தரங்கில் வழங்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் விவரங்கள் பின்வருமாறு.

அட்டவணை 7.9: இந்த கருத்தரங்கில் வழங்கப்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளின் விவரங்கள்

#	பெயர்	முன்மொழிவின் தலைப்பு
1.	கலா. ஏ.எம். ஜஸீல்	கல்வி இளமாணிப் பட்டத்தைத் தொடரும் மாணவர் மத்தியில் ஆங்கிலத்தை மேம்படுத்துவதற்கு சமூக ஊடகங்களின் செல்வாக்கு மிகுந்த கற்பித்தல் அணுகுமுறைகளின் பயனுறுதி.
		ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் படிக்கும் ஆசிரியர் பயிலுநர்களிடையே காணப்படும் இணையவழிக் கற்பித்தல் குறித்த விழிப்புணர்வு பற்றிய ஆய்வுக்கான வழிகாட்டுதல்கள்
2.	எஸ்.ஏ.என். தனுஷ்க ஏ.எஸ்.கே. வரஹேன	கலப்புக் கற்றலுக்கான ஒரு பன்னிலை மூடிய சுற்றுக் கட்டுப்பாட்டு மாதிரி - முறையான தொடர் தர மேம்பாடு, தர உத்தரவாதம் என்பவற்றுக்கான புதிய அணுகுமுறை அடிப்படையிலான ஓர் ஆய்வுக் கட்டுரை
3.	ஜே.ஏ.எம்.பி. கருணாரத்ன கி.பி. ஹந்துன்கொட	விரல் நுட்பத்தில் இலக்கணம்: நிகழ்காலம், இறந்த காலம் ஆகிய காலங்களில் பயன்படுத்தப்படும் துணைவினைச் சொற்களைக் கற்பிக்கையில் பயன்படுத்தத்தக்க புதிய இலக்கணம் கற்பித்தல் நுட்பங்கள்.
4.	நந்துல பெரேரா பேரா. சுந்தன ஜயலத்	உயர்மட்ட அறிவார்ந்த சிந்தனையை மதிப்பிடும் வகையில் புளூமின் வகைப்பாட்டிலுள்ள பரந்துபட்ட பயன்பாட்டை ஆய்வுசெய்தல்
5.	எஸ்.டபிள்யு.எஸ். குலரத்ன பி.எஸ். ரத்னசேகர	சமூக பொருளாதார ஒரேமாதிரித் தன்மைகளுக்கும் இலங்கையில் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பவர்களுக்கிருக்கும் ஆங்கிலம் பேசும் ஏக்கத்துக்கும் இடையிலான உறவு
6.	டிலினி ரணசூரிய என்.கே.ஜி.எஸ். ஆரியவன்ச	ஆங்கில மொழி கற்பித்தல் வகுப்பறையில் பாவனை செய்தல் செயற்பாடுகள் மூலம் பேச்சாற்றலை வளர்த்தல்
7.	யு. சிவச்செல்வி பி.எம்.ரி.டி. ஜயசேகர ரி.ஆர். விதானபத்திரண ஜி.ஆர்.எம். கம்லத்	வாழ்க்கைத்தொழில்சார் தெரிழல்நுட்பப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மாணவர் மத்தியில் பட்டக்கற்கைத் தேர்வினைத் தீர்மானிக்கும் முக்கிய காரணி
8.	எஸ்.ஏ. லியனகே ஏ.எஸ்.கே. வரஹேன	என்ட்ரோபி மற்றும் ஸ்பேசிசம்: செயல்திறன் கோட்பாடுகளுக்கான விரிவாக்கம்
9.	எஸ்.ஜி. நம்புவசம்	கேட்டற் சவாலுள்ள இளைஞர்கள் தமது தகவற் தொடர்பாடற் தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் வகையில் அவர்களுக்கான இலத்திரனியற் கற்றல் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான அணுகுமுறை
10.	எஸ்.ஜி. நம்புவசம் பி. ஏக்கநாயக்க எல்.எம். கமகே பி.யு.எல் பெர்னாண்டோ	கேட்டற் சவாலுள்ள நபர்களுக்கும் அவ்வாறல்லாத நபர்களுக்கும் இடையிலான தொடர்பாடற் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான கைபேசி அளாவற் செயலி
11.	பொறி. எச்.பி.ஏ.ஐ. பத்திரண	நிறுவனங்களில் தகவல் அமைப்பாலுண்டான மாற்றங்களை முகாமை செய்வதற்கான சட்டகம்
12.	திருவாட்டி என்.எல்.பி. ஒஷாதி	பணியிடங்களில் மூலோபாய முகாமைத்துவ நடைமுறைகளின் வகிபாகம் பற்றிய ஆய்வு: நிறுவன முகாமையாளர்களின் கோணத்தில்
13.	ரி.ஆர். விதானபத்திரண	இலங்கையின் அரச வங்கிகளிலுள்ள நிறுவன நடைமுறைகளைக் கற்றல்
14.	ரி.கே. மல்வத்த எஸ்.பி. இம்புல்தெனிய எம்.எச்.பி.எஸ். ரங்கண	உடற்றகுதி, உடல் நலம் என்பன பற்றிய சுய வழிகாட்டலுக்கான முப்பரிமாண அவதார் செயலி
15.	டிலினி ரணசூரிய	தொலைக்காட்சி விளம்பரங்களில் இடம்பெறும் மொழி மாற்றங்கள் குறித்து பார்வையாளர்களின் கண்ணோட்டம் - ஓர் மதிப்பீடு
16.	ஏ.ஏ. குணவர்தன ஏம்.பி.எஸ்.பி. டயஸ்	ஆங்கில இலக்கணம் கற்றிலில் உள்ள ‘‘வலைப் பூ’’, ‘‘கரும்பலகை முறை’’ என்ற இரண்டு ஊடகங்களினதும் பயன் குறித்த ஒப்பீட்டு ஆய்வு
17.	பி.எம்.ரி.டி. ஜயசேகர ரி.ஆர். விதானபத்திரண யு. சிவச்செல்வி	வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பலகலைக்கழகத்தின் தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பத் துறை வார இறுதி அணி மாணவர்களின் மன அழுத்தத்துக்கான காரணங்களும் அதிலிருந்து வெளிவர அவர்கள் கையாளும் உத்திகளும்

7.13 பீடச் சபைக் கூட்டங்கள்

ஒவ்வொரு மாதமும் பீடச் சபையின் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அந்த வகையில் 2019ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் நடத்தப்பட்டன. மாணவர் பிரதிநிதிகளும் குழுவின் உள்வாரி, வெளிவாரி உறுப்பினர்களும் தவறாது கூட்டங்களிற் கலந்துகொள்கிறார்கள்.

7.14 மாணவர் பிரதிநிதிகளின் விவரங்கள்

2019 ஓகஸ்ட் வரை பீடக் குழுவுக்கான மாணவர் பிரதிநிதிகளாக திரு. எஸ்.எம்.ஏ.ரி. பண்டார (தொழிற்துறை முகாமைத்துவம்) திரு. ஆர்.எஸ்.வி.ஏ.கே. விஜேதுங்க (தொழிற்துறை முகாமைத்துவம்) ஆகியோரின் பெயர்கள் மாணவர் பேரவையால் முன்மொழியப்பட்டதோடு திரு சி.ரி.என். பெனாண்டோ (மென்பொருட் தொழில்நுட்பம்) திரு. புத்திக்க வல்பிட்ட (மென்பொருட் தொழில்நுட்பம்) ஆகியோர் பயிற்சித் தொழில்நுட்பப் பீடக்குழுவின் மாணவர் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர்.

7.15 மாணவர் செயற்பாடுகள் / சாதனைகள்

<u>CSR நிகழ்ச்சிகள்</u>

- புத்தாண்டு, வெசாக், வாணி விழா, கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள்,
- துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், ரக்பி போட்டிகள்

<u>போட்டிகள்</u>

- DcanSpace அக்கடமியால் நடாத்தப்பட்ட சமூக முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தில் தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பத் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்

<u>பொருட்காட்சிகளில் பங்கேற்றல்</u>

- பட்டக்கற்கை மாணவர்கள Tec-Ex பொருட்காட்சியை பல்கலைக்கழக வளாகத்தில் ஒழுங்கமைப்பதிலும் அதில் பங்கேற்பதிலும் ஈடுபட்டுள்ளனர்

8 தொடர் கல்வி மையம் (CEC)

தொடர் கல்வி மையமானது இப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதிலிருந்து டிப்ளோமா, சான்றிதழ், குறுங் கற்கைநெறிகள், தொடர்ச்சியான தொழில்விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிற விரிவாக்க நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது. பாராளுமன்றச் சட்டத்திற்கு அமைவாக பல்கலைக்கழக கிளையே இலங்கை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தின் செயற்பாடுகளைத் தொடர்கிறது.

குறுகிய கால தொழில்வாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில், பயிற்சியாளர்களின் பயிற்சி (TOT) மதிப்பீட்டாளர்களின் பயிற்சி (TOA) ஆகிய நிகழ்ச்சித்திட்டங்கள் துறையில் நிலவும் அவற்றுக்கான கேள்வி, அவசியம் என்பவற்றின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன. இவை தொழிற்துறை ஊழியர்களினதும் தொழில்சார் கல்வி, பயிற்சித் துறையின் கற்பித்தல் துறைசார்ந்தவர்களதும் தொழில்வாண்மை விருத்திக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் குறுகிய காலத்தைக் கொண்டவையாக இருந்தாலும், இவை உண்மையான தொழிற்சூழலை அனுபவிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டவை.

8.1 டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

அட்டவணை 8.1: டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்

டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	NVQ மட்டம்	பதிவுசெய்த மாணவர் எண்ணிக்கை
தொழில்நுட்ப ஆசிரியர் கல்வியில் தேசிய டிப்ளோமா	மட்டம் 5	102
பயிற்சி நிலைய முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா	மட்டம் 6	30

8.2 குறுங்கால நிகழ்ச்சித்திட்டம்

8.2.1 மதிப்பீட்டாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (TOA)

வருடாந்த இலக்கு - 250

அட்டவணை 8.2: மதிப்பீட்டாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

	சான்றிதழ்	காலம்	பங்குபற்றியோர் எண்ணிக்கை	இலக்கு
01	ToA 106	11/03/2019 -15/03/2019	34	40
02	ToA 107	25/03/2019-29/03/2019	33	44
03	ToA 108	10/06/2019-14/06/2019	28	42
04	ToA 109	22/07/2019-27/07/2019	31	47
05	ToA 110(தமிழ் மொழிமூலம்)	05/08/2019-09/08/2019	34	43
06	ToA 111	05/08/2019-09/08/2019	40	42
07	ToA 112	16/09/2019-20/09/2019	27	50
08	ToA 113 (மட்டம் 5)	30/09/2019-04/10/2019	21	42
09	ToA 114	07/10/2019-11/10/2019	30	40
10	ToA 115	28/10/2019-01/11/2019	17	50
	மொத்தம்		**295**	**440**

8.2.2 தொழில்சார் கல்வி, பயிற்சித் துறையிலுள்ள தகுதிவாய்ந்த தலைவர்கள்

இலக்கு 125

அட்டவணை 8.3: தொழில்சார் கல்வி, பயிற்சித் துறையிலுள்ள தகுதிவாய்ந்த தலைவர்கள்

	சான்றிதழ்	**காலம்**	**பங்குபற்றியோர் எண்ணிக்கை**
01	Quality	24/07/2019-25/07/2019	17
02	Quality	22/08/2019-23/08/2019	29
03	Quality	19/09/2019-20/09/2019	34
04	Quality	24/10/2019-25/10/2019	22
	மொத்தம்		**102**

9 அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாதப் பிரிவு (AAQA)

9.1 அறிமுகம்

AAQA பிரிவானது 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறுவப்பட்டது. குறித்த பிரிவு அதன் முதல் ஆண்டில், துணைச் சட்டங்கள், ஒழுங்குமுறைகள், விதிமுறைகள், நடைமுறைகள் முதலான தற்போதுள்ள தேவையான ஆவணங்களை மேம்படுத்துவதிலும் திருத்துவதிலும் கவனம் செலுத்தியதோடு அதன் இரண்டாவது ஆண்டில் பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், அங்கீகார செயல்முறைகள், தர உத்தரவாத நடவடிக்கைகளைத் தொடங்குதல் முதலான விடயங்களில் படிப்படியாகக் கவனம் செலுத்தியது.

9.2 சுருக்கமான தர உத்தரவாதக் கட்டமைப்பு

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒரு தர உத்தரவாதக் கட்டமைப்பை கொண்டுள்ளது.

அக்கட்டமைப்பின் அம்சங்களும் செயற்பாடுகளும் பின்வரும் விடயங்களில் பல்கலைக்கழகத்தின் தரத்தை உறுதிப்படுத்துகின்றன:

- பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிற்கான சட்டத் தேவைகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் தரத்தில் காணப்படல்
- பௌதிக வளங்களின் தரம்
- பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரம்
- பல்கலைக்கழக ஆசிரியர்களின் தகுதிகளும் தகைமைகளும்
- ஆய்வு நடவடிக்கைகள்
- கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கும் முறை
- மதிப்பீட்டு நடைமுறைகள்
- மாணவர் நலன்புரி

2008ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகமானது அதன் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் குறிப்பிட்டிருப்பது போல ஓர் பட்டம் வழங்கும் நிறுவனமாக அனைத்துச் சட்டத் தேவைப்பாடுகளையும் கொண்டுள்ளது.

2008ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட இப்பல்கலைக்கழகமானது இலங்கையில் காணப்படும் ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களைப் போலவே சட்டம், கல்விசார் அந்தஸ்தைக் கொண்டுள்ளது. பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வெளியிடப்பட்டதும் 1992.03.13ஆம் திகதியிடப்பட்டதுமான 16/92ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 6, 7ஆம் பிரிவுகளின்படி, வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டங்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின்கீழ் காணப்படும் பல்கலைக்கழகங்களாலும் பொதுநலவாயப் பல்கலைக்கழகங்களின் சங்கங்களின் பட்டியலில் மற்றும் / அல்லது சர்வதேச பல்கலைக்கழகக் கையேட்டில் பட்டியலிடப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களாலும் வழங்கப்படும் பட்டங்களுக்குச் சமமானதாகும்.

ஒரு நிர்வாகக் கட்டடத் தொகுதி, விரிவுரை மண்டபங்கள், நூலகம், ஆய்வுகூடங்கள், கலையரங்கம், சிற்றுண்டிச் சாலை, விடுதிகள் முதலான தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் நிறுவப்பட்டுள்ளதோடு பல்கலைக்கழக வளர்ச்சியின் தேவைக்கேற்ப அவை மேலும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.
பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் தரம், பல்கலைக்கழகத்தின் தலையாய இலக்கு என்பவற்றை இந்த ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள தர உத்தரவாதக் கட்டமைப்பின் மொத்த செயற்பாடுகளும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

மேற்போந்த சட்டமானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் முகமாக பல்கலைக்கழகப் பணியாளர்கள் யாவர் அவர்களது பொறுப்புகள் எவை என்பது பற்றியும் நிர்வாக குழுக்கள் பற்றியும் குறித்துரைக்கிறது. இந்நிர்வாக குழுக்கள் இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் நிர்வாகக் குழுக்களிலிருந்து எவ்விதத்திலும் வேறுபட்டவை அல்ல.

பல்கலைக்கழகப் பணியாளர்கள்

I. துணை வேந்தர்
II. பீடாதிபதிகள்
III. பணிப்பாளர் நாயகம்
IV. நிதிப் பணிப்பாளர்
V. ஊடகம், தகவற் பணிப்பாளர்
VI. அனுமதி, அங்கீகாரம், தர உத்தரவாதப் பணிப்பாளர்

நிர்வாகக் குழுக்கள்

I. ஆட்சிச் சபை
II. கல்விசார் பேரவை
III. அனுமதி, அங்கீகாரம், தர உத்தரவாத சபை
IV. பீடச்சபைகள் (மேற்குறித்த சபைகளின் அமைப்புத் தொடர்பாக குறித்த சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது)

தேவையான தரம் எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது என்பதை விளக்குவதற்கு இச்சபைகளின் செயற்பாடுகள் இங்கே சுருக்கமாக விவரிக்கப்படுகின்றன. கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், தொழில்நுட்பப் பயிற்சிப் பீடம், தொழிற்துறை மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பப் பீடம் ஆகிய இரண்டு பீடங்களின் கீழ் நடத்தப்படுகின்றன. பாட அலகுகள், அவை வழங்கப்படும் முறை, பரீட்சைகள், மதிப்பீடு போன்றவற்றை உள்ளடக்கிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான அனைத்து விடயங்களையும் பீடச் சபைகள் கலந்தாலோசித்துக் கண்காணிக்கின்றன.

பீடச் சபைகளில் எடுக்கப்படும் பரிந்துரைகளும் முடிவுகளும் கல்விப் பேரவையின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். கல்விப் பேரவை சூழ்நிலையையும் அப்பரிந்துரைகள், முடிவுகளின் கனதியையும் பொறுத்து ஆளுநர் குழுவின் ஒப்புதலைப் பெறலாம். கல்விப் பேரவை என்பது அதன் கட்டமைப்பு, செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் இலங்கையில் உள்ள மரபார்ந்த பல்கலைக்கழகங்களிலுள்ள மூதவைக்கு ஒப்பானதாகும்.

மாணவர் அனுமதி நடைமுறைகள், நிகழ்ச்சித்திட்டங்களின் அங்கீகாரம், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் தொடர்பான கல்வி மற்றும் நிர்வாக விடயங்கள், பல்கலைக்கழகத்தின் பொதுவான தர உத்தரவாதச் செயல்முறைகள் பற்றிய முடிவுகளை எடுக்கும்போது அம்முடிவுகள் அனுமதி, அங்கீகாரம் மற்றும் தர உத்தரவாத சபையின் ஒப்புதலுக்காக அனுப்பப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் மற்றும் மதிப்பீட்டு நிலையம் ஒன்று காணப்படுகின்றது. பரீட்சைகளை நடாத்துதல், கண்காணித்தல், விடைத் தாள்களைத் திருத்துதல், பெறுபேறுகளைப் பதிவு செய்தல், சான்றிதழ்களை வழங்குதல் ஆகியவற்றுக்கு இந்நிலையமே பொறுப்பாகும். இந்த நடைமுறைகள் இலங்கையில் உள்ள மற்ற பல்கலைக்கழகங்களின் நடைமுறைகளை ஒத்தவையாகும்.

பல்கலைக்கழகத்தில் தர உத்தரவாதக் குழு ஒன்றும் காணப்படுகிறது. இக்குழு மாதந்தக் கூட்டங்களை நடாத்தி கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் விதிகள், நியமங்களுக்கு அமைவாக நடத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளையும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான வசதிகளையும் மாணவர் நலன்புரிச் சேவைகளையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளையும் முன்னெடுக்கிறது. மேலும், இத்தர உத்தரவாதக் குழுவால் மாதாந்த முன்னேற்ற அறிக்கை ஒன்றும் கல்விப் பேரவைக்கு அனுப்பப்படுகிறது.
மேலே குறிப்பிட்ட அதிகாரிகளினதும் நிர்வாகக் குழுக்களதும் அனைத்து செயற்பாடுகளும் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள், விதிமுறைகள், விதிகள், நடைமுறைகள் மற்றும் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

மேற்குறித்த ஆவணங்கள் உள்ளடக்கும் விடயங்கள் கீழே தரப்படுகிறது
துணைச் சட்டங்கள்

- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டங்கள், பட்டப்பின் டிப்ளோமாக்கள் மற்றும் உயர் பட்டங்கள் தொடர்பான துணைச் சட்டம்.
- பரீட்சைகளை நடாத்துதல், குற்றங்கள், தண்டனைகள் மற்றும் மேல்முறையீட்டு நடைமுறைகள் நடத்துவதற்கான தொடர்பான துணைச் சட்டம்.
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர் பேரவைக்கான துணைச் சட்டம்

- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் விடுதிகள் மற்றும் மாணவர் ஒழுக்கம் தொடர்பான துணைச் சட்டம்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் தொடர்பான துணைச் சட்டம்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழக கல்லூரிகளின் டிப்ளோமா வழங்கும் விழாவின் நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள்

ஒழுங்குமுறைகள்

- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்ப இளமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான ஒழுங்குமுறைகள்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் தொடர்பான ஒழுங்குமுறைகள்

விதிகள்

- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான விதிமுறைகள்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் தொழிற்றுறைசார் மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணிப் பட்டப்படிப்பினை வழங்குவதற்கான விதிமுறைகள்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான விதிமுறைகள்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபையின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விதிமுறைகள்
- வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தகுதிச் சான்றிதழ்கள், தொடக்கநிலைச் சான்றிதழ்கள், சான்றிதழ்கள், உயர் சான்றிதழ்கள், டிப்ளோமாக்கள் மற்றும் உயர் டிப்ளோமா சான்றிதழ்கள் விதிமுறைகள்

நடைமுறைகள்

- நடைமுறை – அனுமதி நடைமுறையும் பதிவுசெய்தலும்
- நடைமுறை – விலக்களிப்புகள்
- நடைமுறை – விடைத்தாள்களின் பெறுபேறுகளை மீளாய்வுசெய்தல்
- துறை மட்டத்தில் வெளியிடப்படும் பரீட்சை முடிவுகளுக்கான நடைமுறை

கொள்கைகள்

- பணம் மீளச்செலுத்தும் கொள்கை

9.3 அங்கீகாரம்

பின்வரும் பட்டக் கற்கைகள் 2017இல் சிட்னி உடன்படிக்கையின்கீழ் இலங்கைப் பொறியியலாளர் நிறுவகத்தின் (IESL) அங்கீகாரத்தைப் பெற்றது.

- பொறி இலத்திரனியல் தொழில்நுட்பத்தில் இளங்கல்விமாணி
- கட்டட சேவைகள் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி
- உற்பத்தித் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளமாணி

முதல் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களில் (கட்டுமானத் தொழில்நுட்பமும் வள முகாமைத்துவம் மற்றும் கணிய ஆய்வும்) கிடைத்த பரிந்துரைகளின்படி அடுத்த IESL மதிப்பாய்வுக்கு ஆயத்தமாவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன முறையே.

9.4 தர உத்தரவாதம்

பல்கலைக்கழகத்தின் AAQA பிரிவு பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் தர மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சிகளிலும் திறன் விருத்தி அமைச்சினாலும் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் நடாத்தப்படும் நிகழ்ச்சிகளிலும் ஆர்வத்துடன் பங்கேற்று வருகிறது.

செய்தி மடல்கள், இணைப் பாடவிதான செயற்பாடுகள், ஆய்வுக் கருத்தரங்குகள், அழகியல் நிகழ்ச்சிகள் போன்ற செயலாக்கங்கள், செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகளில் இப்பிரிவு முனைப்புடன் பங்கேற்றது. இது போன்ற செயற்பாடுகளே ஒரு கல்வி நிறுவனத்தில் தரத்தை மேம்படுத்துகின்றன.

9.5 தொழிற் கல்வி, தொழிற் பயிற்சித் துறையில் தர மேம்பாட்டுக்கான தலைமைத்துவத்தை வழங்குதல்

பல்கலைக்கழகமானது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் இணைந்து திறன்சார் துறை மேம்பாட்டுத் திட்டத்தின் அனுசரணையில் தர மேம்பாட்டு அமைப்புக்குப் (QIS) பெரும் பங்காற்றியுள்ளது

10 தாபனப் பிரிவு

தாபனப் பிரிவானது பல்கலைக்கழகத்தின் கல்வி, கல்வி சாரா ஊழியர்களின் மனிதவள முகாமைத்துவ விடயத்தில் பல்கலைக்கழகத்துக்கு உதவுகிறது. இப்பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளாவன,

- பல்கலைக்கழகத்தின் வருடாந்த மனித வலு பற்றிய திட்டமிடல்
- வெற்றிடங்களை நிரப்புவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள்
- ஆட்சேர்ப்பு / திறமையானவர்களை உள்வாங்கல்
- இழப்பீட்டு முகாமைத்துவம்
- வருடாந்தச் செயற்திறன் மதிப்பீடு
- மனித வளம் மற்றும் திறன் விருத்தி
- இறுதிப் பயன் முகாமைத்துவம்
- தொழிற்துறை உறவுகள்


பல்கலைக்கழகத்தின் தற்போதுள்ள மனித வளங்களின் உச்சப் பயன்பாட்டை இப்பிரிவு உறுதி செய்கின்றது. மேலும், திறமையான மனித வளங்களைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும் சிறந்த பயன்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வேலை செய்வதற்குகந்த பணியிடச் சூழலை பல்கலைக்கழகச் சமூகத்துக்கு வழங்கும் வகையிலும் மூலோபாயத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

10.1 புதிய ஆட்சேர்ப்புகள் - 2019

பல்கலைக்கழகத்திற்கான ஊழியர்களை நியமிக்கும் அதிகாரம் ஆட்சியாளர் சபைக்கே காணப்படுகிறது. குறித்த சபையின் ஒப்புதலுடன் 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகள் வருமாறு,

அட்டவணை 10.1: புதிய ஆட்சேர்ப்புகள் - 2019

#	பெயர்	பதவி	நியமனத் திகதி
1.	திரு. ஆர்.பி. யத்தெகிகே	செய்முறை விரிவுரையாளர்	26/02/2019
2.	திருவாட்டி. ஏ. ஹம்சப்பிரியா	செய்முறை விரிவுரையாளர்	26/03/2019
3.	திருவாட்டி. டபிள்யு.எம்.என்.எல்.யு. சந்திரசேன	செய்முறை விரிவுரையாளர்	30/04/2019
4.	திருவாட்டி. யு.ஆர்.எஸ்.ரி. ஜயவர்தன	செய்முறை விரிவுரையாளர்	15/05/2019
5.	திருவாட்டி. கே.யு.எம். டி சில்வா	முதுநிலை விரிவுரையாளர் II	15/03/2019
6.	திருவாட்டி. பி. ஏம். பெரேரா	முதுநிலை விரிவுரையாளர் II	22/04/2019
7.	திருவாட்டி. எம்.ஜி.டி. உமயங்கனி	முகாமைத்துவ உதவியாளர்	04/06/2019
8.	திருவாட்டி. டி. என். முனசிங்க	முகாமைத்துவ உதவியாளர்	04/06/2019
9.	திருவாட்டி. டி.எம்.எஸ்.ஆர்.பி. விஜேக்கோன்	முகாமைத்துவ உதவியாளர்	01/08/2019
10.	திரு. கே.எல்.ஒ கொடித்துவக்கு	இணை அலுவலர்	01/08/2019
11.	திருவாட்டி. எல்.கே.என்.டி. பொன்னாண்டோ	செய்முறை விரிவுரையாளர்	02/09/2019



உரு 10.1: ஆட்சேர்ப்புகள் பற்றிய சுருக்க விவரம் 2019

பல்கலைக்கழகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் என்ற வகையில் 56 கல்விசார் பணியாளர்களும் 147 கல்வி சாரா பணியாளர்களும் காணப்படுகின்றனர். 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மொத்தமாக 20 வெற்றிடங்கள் காணப்பட்டதோடு அதில் 11 வெற்றிடங்கள் முகாமைத்துவ சேவைகள் பிரிவின் ஒப்புதலுக்கு அமைய குறித்த ஆண்டுக்குள் நிரப்பப்பட்டன.


10.2 2019ஆம் ஆண்டு நிகழ்ந்த பதவி விலகல்கள் / பதவி வெறிதாக்கங்கள் / ஒப்பந்த முடிவுறுத்தல்கள் / ஓய்வுகள்

2019 ஆம் ஆண்டில், வெவ்வேறு பதவியை வகித்து வந்த பதினொரு பணியாளர்கள் தங்கள் பதவி விலகல் கடிதங்களை வழங்கி பல்கலைக்கழக சேவையை விட்டு வெளியேறிய அதே நேரத்தில் பணியாளர் ஒருவர் தனது ஒப்பந்த காலத்தை முடித்து வெளியேறினார். அலுவலக உதவியாளர் ஒருவர் தன் விருப்பின் பேரில் பதவியை வெறிதாக்கிச் சென்றதோடு எழுத்தர் தரத்திலும் முதனிலைத் தரத்திலும் கடமையாற்றிய இரண்டு ஊழியர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டனர். இது பற்றிய சுருக்க விபரம் அட்டவணை 10.2இல் வழங்கப்பட்டுள்ளது

அட்டவணை 10.2: 2019ஆம் ஆண்டு நிகழ்ந்த பதவி விலகல்கள் / பதவி வறிதாக்கங்கள் / ஒப்பந்த முடிவுறுத்தல்கள் / ஓய்வுகள்

	பெயர்	பதவி	நியமனத் திகதி	பதவி விலகிய திகதி	காரணம்
1.	திரு. டபிள்யு. கே. லங்காபுர	செய்முறை விரிவுரையாளர்	16/03/2018	15/03/2019	ஒப்பந்த காலம் முடிந்தது
2.	திருவாட்டி. கே.எம்.பி.பி.என். பெரேரா	செய்முறை விரிவுரையாளர்	04/09/2018	31/01/2019	பதவி விலகல்
3.	திரு எஸ்.ஏ. ரஞ்சித்	முகாமைத்துவ உதவியாளர்	12/07/1999	04/04/2019	ஓய்வு
4.	திருவாட்டி. கே.பி.ஏ.ஜி டி சில்வா	இணை அலுவலர்	19/07/2005	30/04/2019	பதவி விலகல்
5.	திருவாட்டி. என்.டபிள்யு.கே.டி.வி.பி. ஒபத	விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)	03/10/2014	14/04/2019	பதவி விலகல்
6.	திரு. டி.எஸ். ஹெட்டியாரச்சி	பணிப்பாளர் (MIS)	20/10/2011	30/04/2019	பதவி விலகல்
7.	திரு. கே.எம்.எஸ்.ஏ.டி. பண்டார	முதுநிலை விரிவுரையாளர் II	04/07/2013	04/07/2019	பதவி விலகல்
8.	திருவாட்டி. ஏ. ஹம்சப்பிரியா	செய்முறை விரிவுரையாளர்	26/03/2019	01/08/2019	பதவி விலகல்
9.	திரு. ஜி.ஜே. சதுன்	அலுவலக	06/07/2015	09/08/2019	பதவி

	சமீர	உதவியாளர்			வெறிதாக்கல்
10.	திரு. எஸ்.எஸ். விதானபத்திரண	அலுவலக உதவியாளர்	15/11/1999	20/08/2019	ஓய்வு
11.	திரு. பி.கே.பி. புஷ்பகுமார	விரிவுரையாளர்	02/10/2017	04/10/2019	பதவி விலகல்
12.	திருவாட்டி. எஸ்.சி.என். பெரேரா	விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)	02/10/2017	02/10/2019	பதவி விலகல்
13.	திருவாட்டி. டபிள்யு.கே. மொரமுதலி	விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)	01/07/2016	03/10/2019	பதவி விலகல்
14.	கலா. ஏ.எம். ஜஸீல்	முதுநிலை விரிவுரையாளர் II	01/11/2017	01/11/2019	பதவி விலகல்
15.	திரு. கே.யு.எம். டி சில்வா	முதுநிலை விரிவுரையாளர் II	15/03/2019	31/12/2019	பதவி விலகல்



உரு 10.2: 2019ஆம் ஆண்டுக்கான பதவி விலகல் பற்றிய சுருக்க விவரம்

10.3 உள்ளகப் பதவி உயர்வுகள்

தேவையான பட்டப்பின் தகைமைகளையும் பல்கலைக்கழகச் சேவைக் காலத்தையும் கொண்ட கல்விசார் பணியாளர்கள் எண்வருக்கு (08) அவர்களது அடுத்த கட்டப் பதவிநிலைகளுக்கு உள்ளகப் பதவி உயர்வு வழங்கப்பட்டது. இதுபற்றிய விபரங்களை அட்டவணை 10.3இல் காணலாம்

அட்டவணை 10.3 உள்ளகப் பதவி உயர்வுகள் - 2019

	பெயர்	பதவி	பதவி உயர்வு நடைமுறைக்கு வரும் திகதி
1.	திரு. டி.எல். ரணசூரிய	முதுநிலை விரிவுரையாளர்	01/03/2019
2.	திருவாட்டி. யு. சிவச்செல்வி	முதுநிலை விரிவுரையாளர்	01/03/2019
3.	கலா. ஜயலால் வெத்தசிங்க	முதுநிலை விரிவுரையாளர்	01/03/2019
4.	பேரா. ஆர்.ஏ.சி. ஜயலத்	பேராசிரியர்	03/07/2018
5.	கலா. எம்.பி.கே.சி. நந்தபால	முதுநிலை விரிவுரையாளர்	01/04/2019
6.	கலா. எஸ்.ஏ.டி. சஞ்சீவ	முதுநிலை விரிவுரையாளர்	17/05/2019
7.	திரு. எச்.பி.ஏ.ஐ. பத்திரண	முதுநிலை விரிவுரையாளர்	01/02/2019

8.	ஆர்.ஆர்.எம்.டி.பி. ரத்நாயக்க	விரிவுரையாளர்	01/09/2017

அதேவேளை, (தகுதிகாண் நிலை) விரிவுரையாளர் பதவிகளில் உள்ள ஏழு (07) கல்வியாளர்கள் தகுதிகாண் காலத்தில் பரிந்துரைக்கப்பட்ட முதுமாணிப் பட்டத்தைப் பெறத் தவறியதால் அவர்கள் முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட கற்பித்தல் உதவியாளர் பதவிகளிலலேயே மீண்டும் அமர்த்தப்பட்டனர். இந்த மீளமர்த்தங்கள், 2008ஆம் ஆண்டின் 31ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் ஆட்சேர்ப்புத் திட்டங்களிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய சட்ட மாஅதிபர் திணைக்களத்திடமிருந்து சட்ட ஆலோசனைகளைப் பெற்றதன் பிற்பாடு வழங்கப்பட்டன. இது தொடர்பான சுருக்கமான விபரம் அட்டவணை 10.4இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 10.4: முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட பதவிகளில் மீண்டும் அமர்த்துதல்

	பெயர்	மீளமர்த்தப்பட்ட பதவி	மீளமர்த்தப்பட்ட திகதி
1.	திரு. ஆர்.எம்.சி.ஏ.பி. ரத்நாயக்க	கற்பித்தல் உதவியாளர்	01/09/2019
2.	திருவாட்டி எஸ்.ஜி. நம்புவசம்	கற்பித்தல் உதவியாளர்	01/09/2019
3.	திரு. பி. உருத்திரன்	கற்பித்தல் உதவியாளர்	01/09/2019
4.	திருவாட்டி ரி. ஆர் விதானபத்திரண	கற்பித்தல் உதவியாளர்	01/09/2019
5.	திருவாட்டி கே.ஜி.என்.பி. ராஜபக்ஷ	கற்பித்தல் உதவியாளர்	01/09/2019
6.	திரு. சி.ஜே. அபேவிக்கிரம	கற்பித்தல் உதவியாளர்	01/09/2019
7.	திரு. எஸ்.ஏ.என். தனுஷ்க	கற்பித்தல் உதவியாளர்	01/09/2019

10.4 மனித வள அபிவிருத்திக்கான கொள்கை

பல்கலைக்கழகம் அதன் வெற்றிக்கு அதன் பணியாளர்களே காலாக இருப்பதை அங்கீகரித்தது. பணியாளர் மேம்பாட்டுக்கான ஒரு மூலோபாய, தொழில்முறை சார்ந்த அணுகுமுறை இருப்பதால் அது பல்கலைக்கழகம் அதன் நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான திறன்களும் தகைமைகளும் கொண்ட உயர் தகுதி வாய்ந்த பணியாளர்களை ஈர்க்கவும் தக்கவைக்கவும் உதவுகிறது.

மூலோபாயத் திட்டத்தில் துறைகளதும் பல்கலைக்கழகத்தினதும் இலக்குகளை முழுமையாக எட்டுவதற்கு பணியாளர்களும் துறைகளும் தத்தமது ஒத்துழைப்பை வழங்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை உறுதி செய்யும் பொருட்டு பணியாளர்கள் தம்மை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவது பல்கலைக்கழகத் தாபனப் பிரிவின் கடமையாகும்.

பல்கலைக்கழகத்தின் மனித வள மேம்பாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை அது பணியாளர்கள் தமது பணியில் சிறப்பாகச் செயற்படத் தேவையான திறன்கள், அறிவு, ஆளுமைகள் என்பவற்றை மேம்படுத்துவதன் மூலம் அவர்களை நெறிப்படுத்துவதிலும், பயிற்றுவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது. தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் மூலம், அவை பல்கலைக்கழகத்தின் செயற்திறன், உற்பத்தித்திறன், இலாபம் என்பவற்றைப் பெருக்குவதற்கு உதவும்.

அதன்படி, 2019ஆம் ஆண்டில் பல்கலைக்கழகம் பணியாளர்களின் வளர்ச்சியில் கணிசமான கவனம் செலுத்தியதுடன், பல்கலைக்கழக சமூகத்தின் அறிவு, மென் மற்றும் வன் திறன்கள், அணுகுமுறைகள் என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டு திறன் விருத்தித் திட்டங்களில் குறிப்பிடத்தக்க தொகையை முதலீடு செய்தது. எனவே, பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் கல்விசாரா பணியாளர்களுக்காக பல்கலைக்கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை வழங்கியதோடு முதுமாணிப் பட்டப்படிப்புகளை மேற்கொள்ளவும் நிதியுதவிகளை வழங்கியது.

10.4.1 கல்விசார் பணியாளர்களுக்கான குறுங்கால உள்நாட்டு, வெளிநாட்டுப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் வருடாந்த மனிதவள மேம்பாட்டுத் திட்டத்திற்கமைவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட கல்விசார் பணியாளர்களுக்கு பல்கலைக்கழகத்தின் ஆளுமை விருத்தி நிதி மற்றும் திறன் துறை மேம்பாட்டு நிதியம் என்பவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச நிதியின் மூலம் நிதியளிக்கப்படும் குறிப்பிட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு அவ்வாறு வழங்கப்பட்ட மானியங்களின் சுருக்க விபரம் கீழ்க்காணும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில், உள்நாட்டு நிதி மூலம் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்காக வழங்கப்படும் மானியங்களை மட்டுப்படுத்தும் பொருட்டு திருத்தப்பட்ட அரசாங்கக் கொள்கைகளுக்கு அமைவாக குறைந்த எண்ணிக்கையிலான வெளிநாட்டுப் பயிற்சி அமர்வுகளே 2018ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டன. கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அனைத்துப் பயிற்சிகளும் பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கும் நிறுவனத்தால் நேரடியாக வழங்கப்பட்ட மானியங்கள் ஆகும்.

10.4.2 கல்விசார் பணியார்களின் தொழில்சார் பயிலமர்வுகளுக்கான நிதியுதவி

பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணியாளர்கள் தமது தொழில்சார் முன்னேற்றத்தின் பொருட்டு ஒப்புதலளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஏற்பாடுகளின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக குறித்துரைக்கப்பட்ட தொழில்முறைத் தகுதிகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களுக்கான அங்கிகாரமும் நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

ஒரு தேசியப் பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு மையத்தில் ஆசிரியர் பயிற்சி கற்கைநெறியைப் பூர்த்தி செய்திராத புதிதாக நியமிக்கப்பட்ட அனைத்து விரிவுரையாளர்களுக்கும் அவர்களின் வேண்டுகோளின் பேரில் அவர்கள் பல்கலைக்கழகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட முதல் ஆண்டுக்குள் மேற்படி கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்கான நிதி வழங்கப்பட்டது. இது தொடர்பான சுரகக்மான விபரம் அட்டவணை 10.5இல் வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 10.5: உயர் கல்வியில் கற்பிதத்தலில் சான்றிதழ்க் கற்கைநெறிக்கான (CTHE) மானியங்கள்

#	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பெயர்	பதவி	நிறுவனம்
1	உயர் கல்வியில் கற்பிதத்தலில் சான்றிதழ்க் கற்கைநெறி (CTHE)	கலா. ஆர். எல். டபிள்யு கொக்கல	முதுநிலை விரிவுரையாளர் I	ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்
2	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	கலா. ஏ.எஸ்.கே. வரஹென		
3	பணியாளர் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்	திருவாட்டி எஜ்.ஆர்.எம்.பி செனவிரத்ன	விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை)	களனிப் பல்கலைக்ககழம்
4	பணியாளர் மேம்பாட்டில் சான்றிதழ்க் கற்கைநெறி (CCSD)	பேரா. சந்தன ஜயலத்	பேராசிரியர்	வயம்பப் பல்கலைக்கழகம்

10.4.3 அனைத்துப் பணியாளர்களுக்குமான மேம்பாட்டு வாய்ப்புகள் - உள்நாடு

பல்கலைக்கழகத்தின் மனித வள அபிவிருத்திக் கொள்கைக்கு அமைய, கிட்டத்தட்ட அனைத்து ஊழியர்களுக்கும் அறிவு, திறன், ஆளுமை போன்றவற்றை மேம்படுத்தவல்ல பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. இப்பயிலமர்வுகள் துறைத் தலைவர்களின் பரிந்துரைகளுக்கு அமைவாகவும் பணியாளர்களின் வருடாந்தச் சம்பள அதிகரிப்புப் படிவங்களின் மதிப்பாய்வுகளுக்கு அமைவாகவும் குறிப்பிட்ட ஊழியரின் பொருட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டன. பல்கலைக்கழக நிதியின் கணிசமான பகுதி இந்தப் பயிற்சிகளுக்காக முதலீடு செய்யப்படுகிறது. இது தொடர்பான சுருக்கமான விபரம் அட்டவணை 10.7இல் வழங்கப்பட்டுள்ளது.

கல்விசார் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள்:

1. 'LEARN என்ற ஆராய்ச்சி மற்றும் கல்விக் குழுவிற்கு டிஜிற்றல் மாநாட்டு சேவை வசதியளித்தல்' தொடர்பான செயலமர்வு
2. தேசிய ஏற்றுமதி மூலோபாயத்துக்கான முன்னேற்றகரமான இற்றைப்படுத்தல்
3. பயனுறுதிமிக்க ஆய்வு முன்மொழிவு எழுதுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை
4. மின்னற் பாதுகாப்புத் தொடர்பான பயிற்சிப் பட்டறை
5. வளிச் சீராக்கல் அமைப்பு வடிவமைப்புத் தொடர்பான CPD கற்கைநெறி
6. தரமான தலைவர்கள் நிகழ்ச்சித்திட்டம் - முதலாம் கட்டம்
7. TVET துறையில் தொழிற்றுறைப் பங்கேற்பின் நிலை தொடர்பான மதிப்பீட்டு வசதி
8. மின் ஆய்வுக்கான அகச்சிவப்பு வெப்ப வரைவியல் தொடர்பான பயிற்சிப் பட்டறை

9. 2020ஆம் ஆண்டுக்கான பயிற்சித் தேவைப்பாடுகள் பற்றிய மதிப்பீடு தொடர்பான பயிற்சிப் பட்டறை
10. குடியிருப்பு, வணிகக் கட்டடங்களில் LPG அமைப்பினைப் பொருத்துதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை
11. "சூழலுக்கு இசைவான விவசாயமும் உணவுத் தயாரிப்புச் செயன்முறையும் - அவசரத் தேவை" என்பது தொடர்பான செயலமர்வு
12. "திறன்களுக்கான திறவுகோல்" - பங்கீடுபாட்டாளர்களுடனனான ஆலோசனை
13. Excel மூலமான ஆதி முதல் அந்தம் வரையான புள்ளிவிவரத் தரவுப் பகுப்பாய்வு தொடர்பான பயிற்சிப் பட்டறை
14. 'நவீன ஆற்றல் மனினணுவியல்' தொடர்பான கற்கைநெறி

முதுநிலை நிறைவேற்றுப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்:

1. பொதுத் துறைப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
2. '55 வயதுடனான ஓய்வினை மறுதலித்தல்' தொடர்பான கலந்துரையாடல்

இளநிலை நிறைவேற்றுப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்:

1. தகவல் அமைப்புகள் கணக்காய்வு
2. புதிதாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கான மேற்பார்வைத் திறன்கள்
3. LEARNஇன் வருடாந்தப் பொதுக் கூட்டம்
4. "உணர்வுசார் நுண்ணறிவு" பற்றிய பயிற்சிப் பட்டறை
5. "55 வயதுடனான ஓய்வூதியத்தை மறுதலித்தல்" பற்றிய கலந்துரையாடல் மன்றம்
6. பொதுத்துறைப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி
7. தரமான தலைவர்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் முதற் கட்டம்
8. இலங்கைப் பொதுத்துறை கணக்கியல் நியமங்கள் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
9. புதிதாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கான மேற்பார்வைத் திறன்கள்
10. அரசின் மொத்த ஊதிய அமைப்பு மற்றும் பொது நிதி ஒழுங்குமுறைகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
11. கொள்முதல் குறித்த மூன்று நாள் பயிற்சிப் பட்டறை
12. 2020ஆம் ஆண்டிற்கான பயிற்சித் தேவைப்பாடுகள் மதிப்பீடு குறித்த பயிற்சிப் பட்டறை
13. சிறந்த ஆண்டறிக்கைகள் மற்றும் கணக்குகளுக்கான விருது வழங்குவதற்கான போட்டி
14. பயனுறுதிமிக்க ஆராய்ச்சி முன்மொழிவு எழுதுவதற்கான பயிற்சிப் பட்டறை
15. "பொதுத்துறை ஊழியரின் வகிபாகத்தை மாற்றுதல்" பற்றிய விரிவுரை
16. "தொழிற் சட்டம் மற்றும் தொழிற்துறை உறவுகள்" பற்றிய பயிற்சிப் பட்டறை
17. சிக்கல்களைத் தீர்க்கும் நுட்பங்களும் அதற்கான கருவிகளும்
18. "புதுமையான மற்றும் மாற்று முகவர்" பற்றிய விரிவுரை
